


# Indian International Contingent

## Welcome to Singapore!








# இந்திய நடனத்துடன் சிங்கே அணிவகுப்பு

ப. பாலசுப்பிரமணியம்

ராட்சத மயில் தேர் ஒன்றில் அழகிய தாமரை மலர்கள், பாரம்பரிய 'டோல்' மத்தளம் ஒலிக்க அரசனும் அரசியும் ஆடி வருகிறார்கள்.

இது திருமண ஊர்வலம் அல்ல; எஃப்1 கார்பந்தய தளத்தில் மாபெரும் 'சிங்கே 2015' அணிவகுப்பின் ஓர் அங்கம். 'வீ லவ் எஸ்ஜி' (We Love Sg) எனும் கருப்பொருளோடு வெள்ளிக்கிழமையும் நேற்றும் நடந்த சிங்கே ஊர்வலம் எல்லா ஆண்டுகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டாலும் இவ்வாண்டு அதற்கென தனிச் சிறப்பு உள்ளது. இவ்வாண்டு சிங்கப்பூரின் 50வது பிறந்தநாளையொட்டி, அணிவகுப்பில் கலந்து சிங்கப்பூருக்கு வாழ்த்துச் சொல்லும் வகையில் சுமார் ஆயிரம் வெளிநாட்டு நடனமணிகள் அணிவகுப்பில் பங்குபெற்றனர். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் 50 விழுக்காடு அதிகம். சீனா, ஜப்பான், இந்தியா, கொரியா, தாய்லாந்து, ரஷ்யா, துருக்கி, ருவாண்டா என கிட்டத்தட்ட 17 அனைத்துலக நடன குழுக்களின் படைப்புகள் அணிவகுப்பை வண்ணமயமாக்கியது.

அவற்றில் 40 பேர் அடங்கிய இந்தியாவின் மணிப்பூரைச் சேர்ந்த 'டோல் சோலாம்' (dol cholam) எனும் பாரம்பரிய கிராமிய மத்தள இசை நடனக் குழுவும் இடம் பெற்றது.

"எங்கள் ஊரில் இம்மாதம் நிகழும் 'ஹோலி' பண்டிகையின்போதுதான் பெரும்பாலும் இந்த நடனத்திற்கு நாம் ஆடுவோம். உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்துகொள்ளும் சிங்கப்பூர் மக்களுக்கு நாம் இந்த நடனப் படைப்பை அர்ப்பணிக்கிறோம்," எனத் தெரிவித்தார் இக்குழு நடன ஆசிரியர் திரு வங்கிம் லொகின்ரஜிட் சிங், 57.

மக்கள் கழக இந்திய நற்பணி செயற்குழுக்கள், நற்பணிப் பேரவை, 'மணிமாறன் கிரியேஷன்' நடனக்குழு, யுவபாரதி அனைத்துலக இந்திய பள்ளி, 'டோல் சோலாம்' நடனக் குழு ஆகியோர் இணைந்து அணிவகுப்பின் 300 நடமணிகள் அடங்கிய இந்தியக் குழுவை உருவாக்கினர்.

இவர்களில் இளைய பங்கேற்பாளர்களில் ஒருவராக 11 வயது ஷான் ஆனந்தன் கவர்ச்சியான அரசனாக உடையணிந்து பாரம்பரிய இந்திய நடனத்தில் ஈடுபட்டார்.

ஜூரோங் வெஸ்ட் தொடக்கப் பள்ளியைச் சேர்ந்த ஷான் நடன ஒத்திகையின்போது புதிய நண்பர்களைச் சந்தித்து அவர்களுடன் இணைந்து ஆடும் அனுபவம் முத்தாய்ப்பாய் விளங்கியது என்றார்.

சுமார் நான்கு ஆண்டுகளாக மூத்த நடனக் கலைஞராக இந்த அணிவகுப்பில் கலந்துகொள்ளும் திருவாட்டி ச.விஜயலட்சுமி, 55, எந்த நடன அசைவாக இருந்தாலும் அதனை ஒரு சவாலாக எடுத்து துடிப்புடன் செயல்பட இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்வதாகக் கூறினார். சிறு வயதிலேயே போலியோ நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் திரு கோ. நெடுமாறன் இரண்டு ஆண்டுகளுக்கு முன், பார்வையாளர் கூட்டத்திலிருந்து இந்த சிங்கே அணிவகுப்பை பார்த்தவர்.

இன்று இந்த இந்திய அணிவகுப்புக் குழுவில் இவர் இடம்பெறுகிறார். இதில் பங்களிப்பதன்மூலம் தனது 53 வயது பிறந்தநாளை நேற்று கொண்டாடிய நெடுமாறனின் நீண்ட நாள் ஆசை நனவானது. கிட்டத்தட்ட 16 ஆண்டுகளாக சிங்கே அணிவகுப்பில் பங்களித்துவரும் இந்தியக் குழுவின் நடன ஆசிரியரான மணிமாறன், ஒரு மாதத்திற்குள் இந்த நடன படைப்பு தயாரானது என்றார்.

"ஒன்றாகக் கொண்டாடுவோம் எனும் கருப்பொருளைக் கொண்ட இந்த இந்திய நடன அங்கம் சிங்கப்பூரின் பிறந்தநாளை மட்டும் அல்லாது சிங்கப்பூருக்கும் இந்தியாவிற்கும் இடையிலான 50 ஆண்டு அரசதந்திர உறவையும் கொண்டாடுகிறது," எனச் சொன்னார் சிங்கே நற்பணி ஏற்பாட்டுக் குழு தலைவர் சித்திரா துரைசாமி.

சிங்கே கொண்டாட்டங்கள் இன்றும் நீடிக்கிறது. 'சிங்கே எஸ்ஜி50 இரவு விழா' ஆர்ச்சர்ட் சாலையில் இரவு 7 மணிமுதல் 10 மணி வரை நடக்கும். இதற்கு ஏதுவாக, ஐஓன் (Ion) ஆர்ச்சர்ட் பேரங்காடிக்கும் நியான் சிட்டி பேரங்காடிக்கும் இடையிலான ஆர்ச்சர்ட் சாலை போக்குவரத்துக்கு மூடப்படும்.

pbala@sph.com.sg





இடமிருந்து: திருவாட்டி ச.விஜயலட்சுமி, திரு கோ.நெடுமாறன், திரு வங்கிம் லொகின்ரஜிட் சிங், திரு மணிமாறன், ஆ.ஷான். **படங்கள்: திமத்தி டேவிட், ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

# CHINGAY 2015 妆艺

## WE ❤ SG

## SPECIAL SG50 EDITION

GRANDEST PARADE IN CHINGAY HISTORY




PA COURSES
Celebrate
WE ♥ PA
COURSES

People's Association

SG 50

chingay
PARADE SINGAPORE

www.chingay.org.sg

Connect with us at:

ChingaySingapore PAssionChingayClub PA_Scene@pa.gov.sg

# CHINGAY 2015 妆艺

WE ❤ SG

## SPECIAL SG50 EDITION

GRANDEST PARADE IN CHINGAY HISTORY

